# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2024

| தரம் 13 (2024) | ஐரோப்பிய வரலாறு (பகுதி I) | 25 B | T | II | 3 மணித்தியாலமும் 10 நிமிடங்களும் |
|---|---|---|---|---|---|

**கிரேக்க - உரோம காலம் முதல் கி.பி 1989 வரை**

### பகுதி I

- இலக்கம் 1-10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று பொருந்தாது காணப்படுகின்றது. அதனை இனங்கண்டு அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. (1) ஸீன் (2) றோன் (3) றைன்
   (4) எல்ப் (5) அல்ப்ஸ் (.....)
2. (1) யூப்பிரிற்றஸ் (2) கிறீற் (3) சிசிலி
   (4) கோர்ஸிகா (5) சைப்ரஸ் (.....)
3. (1) தீப்ஸ் (2) கொறிந்த் (3) மொடானா
   (4) மெகரா (5) மிலேட்டஸ் (.....)
4. (1) ட்றஜன் (2) புளுடாக் (3) ஹட்றியன்
   (4) கலிகுலா (5) மார்க்கஸ் அவுரேலியன் (.....)
5. (1) சலமனிக்கா (2) கேம்பிறிச் (3) பதுவா
   (4) கொரடோவா (5) பொலஞ்ஞா (.....)
6. (1) ஜோன் கல்வின் (2) ஜோன் ஹஸ் (3) ஜோன் வைகிளிப்
   (4) மார்டின் லூதர் (5) ஜோன் செபஸ்டியன் பாக் (.....)
7. (1) வில்லாபிராங்கா (2) கம்போபோமியோ (3) லுனோவில்
   (4) ஏமியன்ஸ் (5) பிரஸ்பர்க் (.....)
8. (1) காசல்ரீ (2) கவுண்ட்கவூர் (3) மெட்டர்நிக்
   (4) சார் அலெக்ஸாண்டர் (5) சாள்ஸ் டெலிரெண்ட் (.....)
9. (1) ஜவகர்லால் நேரு (2) சுகர்னோ (3) யூரி ககாரின்
   (4) மார்ஷல் டீட்டோ (5) அப்துல் கமால் நசார் (.....)
10. (1) உலக உணவுத் திட்டம்
    (2) சர்வதேச நாணய நிதியம்
    (3) உலக வங்கி
    (4) ஐரோப்பிய ஒன்றியம்
    (5) உலக சுகாதார தாபனம் (.....)

- 11 - 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத சோடியினை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

11. (1) லியனாடோ டாவின்சி - மோனாலிசா
    (2) மைக்கல் அஞ்சலோ - இறுதி இராப்போசனம்
    (3) மஸாச்சியோ - ஆதாமும் ஏவாளும் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டமை
    (4) பொற்றிசெலி - வீனஸ்ஸின் பிறப்பு
    (5) ர.்.பாயல் - அதென்ஸ் சிந்தனையாளர் (.....)
12. (1) கிறிஸ்டோபர் கொலம்பஸ் - ஸ்பனியோலா
    (2) வஸ்கோ நியுனெஸ் த பெல்போவா - பனாமா
    (3) பர்னான்டோ கோடெஸ் - குவிபெக்
    (4) பர்த்தலோமியோ டயஸ் - ஆபிரிக்காவின் தென்முனை
    (5) கப்ரால் - பிரேசில் (.....)
13. (1) மூன்றாம் ஜோன் - மக்னா காட்டா
    (2) முதலாம் எட்வேர்ட் - பாராளுமன்றத்தின் தந்தை
    (3) எட்டாம் ஹென்றி - புரட்டஸ்தாந்து பாராளுமன்றம்
    (4) முதலாம் சார்ள்ஸ் - சிவில் யுத்தம்
    (5) இரண்டாம் சார்ள்ஸ் - மகோன்னத புரட்சி (.....)

Past Papers Wiki

14. (1) இத்தாலி ஐக்கியம் - ஒரு புவியியல் வர்ணிப்பு
(2) ஜேர்மனி ஐக்கியம் - இரத்தமும் இரும்பும்
(3) ரஷ்யப் புரட்சி - உணவு, நிலம், சமாதானம்
(4) பிரெஞ்சுப் புரட்சி - சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
(5) அமெரிக்கப் புரட்சி - பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியுமில்லை (.....)

15. (1) வேர்செயில் உடன்படிக்கை - ஜேர்மனி
(2) சென்ற் ஜெர்மேயின் உடன்படிக்கை - ஒஸ்திரியா
(3) நியூலி உடன்படிக்கை - பல்கேரியா
(4) ட்ரியானோன் உடன்படிக்கை - ருமேனியா
(5) லௌசான் உடன்படிக்கை - துருக்கி (.....)

- 16 - 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுக்கள் என்பனவற்றின் தொகுதிகள் X,Y என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுக்கள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர்பு ஒழுங்கிலே தரப்படவில்லை. X நிரலில் உள்ளவற்றை Y நிரலிற்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | X | Y |
|---|---|---|
| 16. | (i) சியஸ் | A வீனஸ் |
| | (ii) ஏரஸ் | B மினர்வா |
| | (iii) அப்ரொடைற் | C ஜுப்பிட்டர் |
| | (iv) பொசைடென் | D செரஸ் |
| | (v) அதீனா | E நெப்டியூன் |

(1) EDABC (2) DEACB (3) CBDAE (4) CDAEB (5) BEADC (.....)

| | X | Y |
|---|---|---|
| 17. | (i) நிகலஸ் கொபர்நிகஸ் | A செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை |
| | (ii) கலிலியோ கலிலி | B வானியல் விஞ்ஞானத்தின் தந்தை |
| | (iii) ஹெரடோடஸ் | C மானிடவியலின் தந்தை |
| | (iv) ஹிபோகிரடிஸ் | D வரலாற்றின் தந்தை |
| | (v) பிரான்சிஸ் பெட்ராக் | E மேற்கத்தைய வைத்தியத்தின் தந்தை |

(1) BADCE (2) BADEC (3) CADEB (4) DBCEA (5) EBDCA (.....)

| | X | Y |
|---|---|---|
| 18. | (i) நிக்கொலோ மக்கியவலி | A லெவியதன் |
| | (ii) அடம் ஸ்மித் | B தேசங்களின் செல்வம் |
| | (iii) தொமஸ் ஹொப்ஸ் | C சட்டங்களின் மெய்ப்பொருள் |
| | (iv) மொன்டெஸ்கியூ | D அரசன் |
| | (v) ஜோன் ஜேக்ஸ் றூசோ | E சமுக ஒப்பந்தம் |

(1) DBACE (2) BDECA (3) DBAEC (4) BADCE (5) EADBC (.....)

| | X | Y |
|---|---|---|
| 19 | (i) ஜோசப் மசினி | A லிபரல் சீர்திருத்தத்தை செயற்படுத்தல் |
| | (ii) பிஸ்மார்க் | B இரத்தமும் இரும்பும் கொள்கை |
| | (iii) ஒன்பதாம் பியுஸ் பாப்பரசர் | C இளைய இத்தாலி இயக்கம் |
| | (iv) கரிபால்டி | D ஐக்கிய இத்தாலியின் மன்னனாக முடி சூடல் |
| | (v) விக்ரர் இமானுவல் | E தென் இத்தாலியைக் கைப்பற்றல் |

(1) BEDCA (2) CADEB (3) CBAED (4) DCBAE (5) ACBED (.....)

| | X | Y |
|---|---|---|
| 20. | (i) றிக்வி லி | A ஆஸ்திரியா |
| | (ii) டக் கம்மர்ஷியல்ட் | B சுவீடன் |
| | (iii) யூதான்ட் | C பெரு |
| | (iv) கூர்ட் வால்ட் கெய்ம் | D பர்மா |
| | (v) பெரஸ் டீ குயிலர் | E நோர்வே |

(1) ACBED (2) BAECD (3) CADBE (4) DEACB (5) EBDAC (.....)

- 21-25 வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒன்று தலைப்புடன் பொருந்தாதுள்ளது. பொருந்தாத கூற்றின் இலக்கத்தை தெரிவு செய்து அதன் இலக்கத்தை எழுதுக.

21. மானிய முறை வீழ்ச்சி
    (1) சிலுவைப் போர்
    (2) அதிகாரம் பரவலாக்கப்படல்
    (3) மத்திய தர வர்க்கத்தினரின் எழுச்சி
    (4) தேசிய அரசுகள் உருவாக்கம்
    (5) தொற்று நோய்களும் பஞ்சங்களும் (.....)

22. தேசிய அரசுகள்
    (1) புவியியல் ரீதியான நிச்சயமான தேச எல்லைகளைக் கொண்டிருத்தல்
    (2) தனியார் படை இல்லாமை
    (3) பிரதேச தலைவர்கள் வலிமை பெறல்
    (4) தேசிய வரிக் கொள்கை காணப்படல்
    (5) சம்பளம் பெறும் அலுவலர்கள் உருவாதல் (.....)

23. முப்பதாண்டுப் போர்
    (1) ஒக்ஸ்பேர்க் உடன்படிக்கையின் குறைபாடு தோற்றத்திற்கான ஒரு காரணம்
    (2) பொஹீமிய பெலடைன் போர் முதலாவது கட்டமாகும்
    (3) புனித ரோமப் பேரரசு பெயரளவு அரசாக மாறியது.
    (4) வெஸ்பேலியா உடன்படிக்கையுடன் முடிவடைந்தது.
    (5) கத்தோலிக்கருக்கும் இஸ்லாமியருக்குமிடையில் நடைபெற்றது. (.....)

24. ஜேர்மனி ஐக்கியம்
    (1) சொல்வரைன் ( Zollvaren) சுங்கவரிச்சங்கம் ஐக்கியத்திற்கு சாதகமாக காணப்பட்டது.
    (2) பிரஷ்ய அரசின் தலைமையில் ஐக்கிப்படுத்தப்பட்டது.
    (3) ஏழு வார யுத்தத்தில் சடோவாவில் ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டது.
    (4) ஜேர்மனி ஐக்கியத்திற்கு மெட்டர்நிக்கின் உதவி பெறப்பட்டது
    (5) செடான் யுத்த வெற்றியுடன் ஜேர்மனி ஐக்கியம் பூரணமாகியது (.....)

25. இரண்டாம் உலகப் போர்
    (1) சரஜீவோவில் ஆஸ்திரிய இளவரசன் கொல்லப்பட்டமை போருக்கு காரணமாக அமைந்தது.
    (2) சர்வதேச சங்கத்தின் தோல்வி.
    (3) ஹிட்லரின் ஆக்கிரமிப்புக் கொள்கை.
    (4) பேர்ள் துறைமுகத்தின் மீது ஜப்பான் விமானக்குண்டு வீசிமையால் அமெரிக்கா போரில் ஈடுபட்டது.
    (5) ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் இணைந்து போரில் ஈடுபட்டன. (.....)

- 26-30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வென்றுக்கும் (A) (B) (C) (D) எனும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடைகளை தெரிவு செய்து
    (A) யும் (B) யும் மட்டும் சரியாயின்……..1 எனவும்
    (A) யும் (C) யும் மட்டும் சரியாயின்……..2 எனவும்
    (B) யும் (C) யும் மட்டும் சரியாயின்……..3 எனவும்
    (C) யும் (D) யும் மட்டும் சரியாயின்…….4 எனவும்
    வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானம் எனில் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (A) யும் (C)யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானம் |

26. எதிர் மதச் சீர்திருத்தம் பற்றிய மேல்வரும் கூற்று/ கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
    (A) கத்தோலிக்கருக்கு எதிராக புரட்டஸ்தாந்து மதத்தவர்களால் மேற்கொள்ளப்பட்டது.
    (B) இயேசு சபை அமைக்கப்பட்டது.
    (C) இக்னேசியஸ் லொயாலா எதிர்மத சீர்திருத்தத்தில் ஈடுபாடு காட்டினார்.
    (D) எதிர்மதச் சீர்திருத்தத்தை முன்னெடுக்க ட்ரென்ட் (Trent) மகாநாடு கூட்டப்பட்டது. (.....)

PAST PAPERS WIKI

Past Papers Wiki

27. அமெரிக்க சுதந்திரப்போர் தொடர்பாக மேல்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?
    (A) ஏழாண்டுப் போரில் தோற்கடிக்கப்பட்டதனால் பிரான்ஸ் அமெரிக்க குடியேற்றங்களுக்கு உதவியது.
    (B) பொஸ்டன் தேநீர் விருந்து என்ற நிகழ்வு போரின் தொடக்க சம்பவமாகும்.
    (C) ஜோன் கிரேன்வில்லினால் டவுன்சென்ட் சட்டம் கொண்டு வரப்பட்டு வரி அறவிடப்பட்டது.
    (D) பிரித்தானியாவிற்கு ஒல்லாந்தின் உதவி கிடைத்தது. (.....)

28. பிரான்சியப் புரட்சி தொடர்பான கூற்றுக்களில் எது/எவை சரியானது /சரியானவை ?
    (A) பதினாறாம் லூயி மன்னன் வர்கோ, நெக்கர் போன்ற திறமையான நிதி மந்திரிகளை நீக்கியமை பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தியது.
    (B) உணவு, நிலம், சமாதானம் என்பது பிரான்சியப் புரட்சியின் சுலோகமாகும்
    (C) லெத்திரே கச்சே ( Latter de Catch) என்னும் பிடியாணை முறையினால் மன்னனின் அரசியல் எதிரிகள் சிறையிலடைக்கப்பட்டனர்
    (D) புரட்சியின் முடிவில் நெப்போலியன் பொனபாட் ஆட்சியைப் பொறுப்பேற்றான். (.....)

29. சர்வதேச சங்கம் தொடர்பான மேல்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது /சரியானவை?
    (A) சர்வதேச சங்கத்தில் அமெரிக்கா முக்கிய உறுப்பு நாடாக காணப்பட்டது.
    (B) அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சனின் எண்ணக்கருவிற்கமைய அமைக்கப்பட்டது.
    (C) தலைமைக் காரியாலயம் ஜெனிவாவில் அமைந்திருந்தது.
    (D) இத்தாலி அபிசீனியாவை ஆக்கிரமித்த போது அதனைத் தடுத்து பிரச்சினையைத் தீர்த்து வைத்தது. (.....)

30. ரஷ்யப் புரட்சி தொடர்பாக மேல்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
    (A) 1917 மார்ச் புரட்சியின் பின் போல்ஷெவிக் குழுவைச் சேர்ந்த கெரன்ஸ்கி ஆட்சிப் பொறுப்பேற்றார்.
    (B) ரஷ்யப் புரட்சி ஏற்பட்ட காலத்தில் இரண்டாம் அலெக்சாண்டர் ரஷ்ய அரசராக இருந்தார்.
    (C) ரஷ்யா ஜப்பானிடம் தோல்வியடைந்தமையால் 1905 இல் கிளர்ச்சி ஏற்பட்டது.
    (D) 1917 அக்டோபர் புரட்சியின் பின்னர் சமவுடமை அரசு நிறுவப்பட்டது (.....)

- 31 - 36 வரையுள்ள எல்லா வினாக்களிலும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக

31. கைத்தொழில் புரட்சியின் போது பதப்படுத்தப்பட்ட இரும்பை தயாரிக்கக் கூடிய ரோலர் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர்
    (1) ஹென்றி பேஸ்மர் (2) ஹென்றி கோட் (3) ஹென்றி பெல்
    (4) ஏப்ரஹாம் டர்பி (5) வில்லியம் சீமன்ஸ் (.....)

32. 1688 ஆங்கில புரட்சியின் போது பதவியிழந்த மன்னன்.
    (1) இரண்டாம் ஜேம்ஸ் (2) இரண்டாம் சார்ள்ஸ் (3) முதலாம் சார்ள்ஸ்
    (4) ஒல்லாந்த வில்லியம் (5) முதலாம் ஜேம்ஸ் (.....)

33. பாப்பரசருடன் 'லத்தரன்' உடன்படிக்கையை மேற்கொண்டவர்
    (1) ஹிட்லர் (2) நெப்போலியன் பொனாபட் (3) வின்சன்ட் சேர்ச்சில்
    (4) முசோலினி (5) கவுண்ட் கவூர் (.....)

34. சோவியத் ரஷ்யாவில் புதிய பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்தவர்
    (1) கெரென்ஸ்கி (2) ஜேசெப் ஸ்ராலின் (3) வீ. ஐ. லெனின்
    (4) லியோன் ட்றொஸ்கி (5) நிகிடா குருஷேவ் (.....)

35. பனிப்போர் காலத்தில் அமெரிக்காவிற்கு எதிராக ரஷ்யா கியூபாவில் ஏவுகணைகளை நிறுத்தியமைக்குப் பதிலாக அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கை
    (1) சேவியத் ரஷ்யா மீது பொருளாதாரத் தடையை ஏற்படுத்தியது.
    (2) ஐக்கிய நாடுகள் சபையில் முறையிட்டது.
    (3) சேவியத் ரஷ்யா மீது ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது.
    (4) நட்சத்திரப் போர்த்திட்டத்தை செயற்படுத்த முற்பட்டது.
    (5) சேவியத் ரஷ்யாவுக்கு எதிராக துருக்கியில் ஏவுகணைகளை நிறுத்தியது. (.....)

- 36 - 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்கு கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவது எது என்பதை தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக

அட்டவணை

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 1. சரியானது | பிழையானது |
| 2. சரியானது | சரியானது |
| 3. பிழையானது | பிழையானது |
| 4. பிழையானது | சரியானது |
| 5. சரியானது | சரியானதும் முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| 36 | கிரேக்கர்கள் ஒரு பொதுவான மொழி பண்பாடு ஆகியவற்றைக் கொண்டிருந்த பொழுதிலும் அவர்கள் அரசியல் அடிப்படையில் பிரிந்திருந்தனர் | ஒவ்வொரு நகராட்சியினையும் பேணிக் கொள்வதில் கிரேக்கர்கள் உறுதி கொண்டிருந்தமையினால் அரசியல் இணைப்பை அவர்களால் ஏற்படுத்த முடியவில்லை | (.....) |
| 37 | ரசிற்ரஸ், லிவி என்பவர்கள் பிரசித்தி பெற்ற உரோம வரலாற்று ஆசிரியர்களாவர் | கிரேக்க பாரசீக யுத்தம் பற்றி துசிடைட்டின் என்ற வரலாற்று ஆசிரியர் எழுதியுள்ளார் | (.....) |
| 38 | லங்காஸ்டர் வம்சத்திற்கும் ஜோர்க் வம்சத்திற்கும் இடையில் நடைபெற்ற போர் குருசுப் போர் எனப்படும் | ஏழாம் ஹென்றி மன்னனால் அங்கிலிக்கன் திருச்சபை அமைக்கப்பட்டது. | (.....) |
| 39 | இத்தாலி ஐக்கியத்திற்கு பாப்பரசர் அனுசரணை வழங்கினார் | அமெரிக்காவின் லுசிடானியா என்ற கப்பலை ஜேர்மனி தாக்கி அழித்ததனால் அமெரிக்கா முதலாம் உலகப் போரில் ஈடுபட்டது. | (.....) |
| 40 | இரண்டாம் உலகப் போரின் பின்னர் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ஜேர்மனி 1990 இல் மீண்டும் இணைக்கப்பட்டது. | நிகிடா குருஷேவ் மேற்கு நாடுகளுடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடித்தார் | (.....) |

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library